
**காதல் தாண்டியும் சில சங்கதிகள் இருக்கின்றன காதலில்..!**

**மீண்டும் மீண்டும் அதே நபருடன் காதலில் விழுந்தால்தான், ஒரு திருமணம் வெற்றியடையும்!**

ஓர் ஆண்/பெண் அலுவலகம் செல்வதற்கு வசதியாக இருக்குமே என்று இரு சக்கர வாகனம் வாங்கத் திட்டமிட்டால், என்னவெல்லாம் யோசிப்பார்கள்? அந்த வண்டியின் விலை, மைலேஜ், நிறம், நிறுவனம், நம்பகத் தன்மை, பயன்பாட்டுத் திறன் எனப் பல அம்சங்களையும் அலசி ஆராய்ந்துதானே வாங்குவார்கள். ஒரு நாளில், அதிகபட்சம் அரை மணி நேரம் பயணிக்கவிருக்கும் இரு சக்கர வாகனத்துக்கே இத்தனை திட்டமிடல் தேவைப்படுகிறது. ஆனால், வாழ்க்கை முழுக்கத் தன்னுடன் கைகோத்து இரவு, பகல், கிறிஸ்துமஸ், தீபாவளி, ஜனவரி, டிசம்பர்களைக் கழிக்கவிருக்கும் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் ஒரு ஆண் அல்லது பெண் இத்தனை தெளிவாகத் திட்டமிடுகிறார்களா? தேர்ந்தெடுத்த பிறகு அந்த இரு சக்கர வாகனம் மட்டும்தான் நமக்குச் சொந்தமாகும். ஒரு திருமணத்துக்குப் பிறகு அவன்/அவளின் குடும்பம், உறவினர்கள், அவர்களின் கோப தாபங்கள், சுக துக்கங்கள் அனைத்தும் இலவச இணைப்பாக வரும். அவற்றையும் எதிர்கொண்டு சமாளிக்கும் திட்டம் இருந்தால், திருமணம் என்ற ஆபரேஷன் சக்சஸ்தான் என்கிறார் மீரா ரவி.

இவரது 'Arrange Your Love Marriage' என்ற புத்தகம் முழுக்கக் காதல், திருமண வடிவம் எடுக்கும்போது வரும் பிரச்னைகளைப்பற்றி முன்னோட்டங்கள், காதலிக்கும் சமயம் நீங்கள் கவனிக்க மறந்த விஷயங்களைப்பற்றிய நினைவூட்டல்களும்கூட!




- **திருமணங்கள் 'ஆச்சர்யங்களில்' நிச்சயிக்கப்படுவது இல்லை!**

இந்தியாவில் ஒவ்வொரு திருமணமும் ஒரு கொண்டாட்டம். மணமேடை, நகைகள், புத்தாடைகள், விருந்துகள், சீர்வரிசை என்று இரண்டு நாள் கொண்டாட்டங்களுக்குப் பிறகு, உறவினர்கள் அனைவரும் கலைந்து செல்ல, வாழ்க்கை எனும் ஓடத்தில் 'தனிமை'யில் பயணிப்பார்கள் தம்பதியர். அந்தச் சமயம் அவர்களுக்குள் ஏற்படும் புரிதலும் நேசமும்தான் வாழ்க்கை மொத்தத்துக்குமான எரிபொருள்.

'எனக்குக் குழந்தை என்றால் மிகவும் ஆசை. ஆனால், இவன் இன்னும் மூன்று வருடங்களுக்குக் குழந்தை வேண்டாம் என்கிறான்!' என்று என்னிடம் முறையிட்ட பெண், மூன்று வருடக் காதலுக்குப் பிறகு அவனை மணம் செய்துகொண்டவள்.

'அவள் அக்கா கொஞ்சம் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதை நாங்கள் காதலித்த ஐந்து ஆண்டுகளில் ஒரு முறைகூட அவள் தெரிவித்தது இல்லை. அது ஏதோ பரம்பரை வியாதி என்கிறார்கள். ஐந்தாண்டு காலக் காதலில் தெரிந்துகொள்ளாத உண்மையை திருமணத்துக்கு மறுநாள் சொன்னால்... எனக்கு வரும் கோபம் நியாயமானதுதானே!' என்று விவாகரத்து கோருகிறார் ஒரு கணவர்.

'காதலிக்கிறோம் என்று சொல்லி எங்கள் வாழ்க்கையின் மூன்று பொன்னான ஆண்டுகளை வீணாக்கிவிட்டோம். அந்தக் காலகட்டம் முழுக்க நாங்கள் எவற்றைப்பற்றி எல்லாம் பேசியிருக்க வேண்டுமோ, அவற்றைத் தவிர எல்லாவற்றைப்பற்றியும் பேசியிருக்கிறோம்!' என்று புலம்பும் காதலன்/காதலி பட்டியலில் நீங்களும் இடம் பிடிக்காதீர்கள்!

- **'என்னுடையது இனிய இல்லறம்' என்பவர்களை உலகம் சந்தேகத்துடனேயே எதிர்கொள்கிறது!**

அவள் இரவு உணவு தயாரிப்பதைக் கவனித்துக்கொண்டு இருந்த கணவன் கேட்டான், 'நீ ஏன் உருளைக் கிழங்குகளை இவ்வளவு பொடிப்பொடியாக நறுக்குகிறாய்?' 'என் அம்மா இப்படித்தான் நறுக்குவார்' என்றாள் மனைவி. உடனே, அவன் தன் மாமியாரிடம் அதே கேள்வியைக் கேட்டான். 'என் அம்மா அப்படித்தான் நறுக்குவார்!' என்று அதே பதிலை மாமியாரும் சொன்னார். அதிர்ஷ்டவசமாக(!) மாமியாரின் அம்மா நலமாகத்தான் இருந்தார்கள். அவரிடமும் அதே கேள்வியைக் கேட்டான் அவன். 'அப்போது என்னிடம் இருந்த வறுக்கும் வாணலி சின்னதாக இருந்தது. அதனால், நான் உருளைகளைப் பொடிப்பொடியாக நறுக்கினேன்!' என்று காரணம் சொல்லியிருக்கிறார்.

இப்படித்தான் வழிவழியாகச் சில அர்த்தம் இல்லாத பழக்கவழக்கங்கள், நடைமுறைகள் குடும்பப் பாரம்பரியமாகத் தொட்டுத் தொடரும். அத்தனை வருடங்கள் நிலவி வந்த நடைமுறையை ஒரே நாளில் நம்மால் மாற்றிவிட முடியாது. அதற்காக அவற்றைச் சகித்துக்கொண்டும் இருக்க முடியாது. ஆனால், கடந்த காலம்

← திறமையின் திசை



வேண்டும். உங்கள் காதலன் அல்லது கணவனுக்குப் பிடிக்குமே என்று 'கலாபக் காதலா!' என்று ஒலிக்கவிட்டிருப்பீர்கள். ஆனால், உங்களை அழைக்கும் அத்தனை ஆண்களும், நீங்கள் அழைப்பை ஏற்கும் வரை தான்தான் உங்கள் கலாபக் காதலன் என்ற கற்பனையில் திளைத்துக்கொண்டு இருக்கலாம். உஷார்!

- நீங்கள் ஒருவரைத் தொடர்புகொள்ளும்போது, உங்கள் அழைப்பு 'கால் வெயிட்டிங்'கில் இருந்தால், உடனே இணைப்பைத் துண்டியுங்கள். எதிர் முனையில் அவர் ஏதேனும் முக்கியமான தகவல்களைக் கேட்டுக்கொண்டு இருந்தால், உங்கள் அழைப்பு ஏற்படுத்தும் 'பீப் பீப்' ஒலி நிச்சயம் உங்கள் மீது ஒரு வெறுப்பை உண்டாக்கும்!
- கால் வெயிட்டிங் வந்தாலோ அல்லது உங்கள் அழைப்பு அட்டெண்ட் செய்யப்படவில்லை என்றாலோ, உடனே மீண்டும் மீண்டும் அழைத்துக்கொண்டே இருக்காதீர்கள். 'நான் இன்னார். இன்ன விஷயம் தொடர்பாகப் பேச விரும்புகிறேன்!' என்ற ஒரு வரி மெசேஜ் அனுப்பிக் காத்திருங்கள்.
- பொது இடங்களில் ஸ்பீக்கர் போனில் பேசுவது, லவுட்ஸ்பீக்கரில் பாட்டு கேட்பது போன்றவை இங்கிதமான பழக்கமல்ல.
- மருத்துவமனை, கோயில்கள், துக்க நிகழ்வுகள் போன்ற இடங்களில் தவறாமல் மொபைலை சைலன்ட் மோடுக்கு மாற்றுங்கள். அவசியமான அழைப்பென்றாலும், மெதுவாகப் பேசி, பிறகு அழைப்பதாகக் கூறுங்கள்.
- எதிர்முனையில் பேசுபவர் எந்தச் சூழ்நிலையில் இருக்கிறார் என்பதைத் தெரிந்துகொண்டு பேச ஆரம்பியுங்கள்.
- அச்சுப்பிச்சு அலறல் ரிங்டோன்களை வைத்து, சுற்றியிருப்பவர்களைத் திகிலூட்டாதீர்கள்.
- அலுவலகத்துக்கு என ஒலி குறைந்த புரொஃபைல்களை ஃபிக்ஸ் செய்துகொள்வதன் மூலம், உங்களுக்கு வரும் அழைப்புகள் மற்றவர் கவனத்தைக் கலைக்காதவாறு

இளமையின் விசை →



பார்த்துக்கொள்ளுங்கள்.

- 24X7 தொடர்புக்குத்தான் அலைபேசிகள். ஆனால், 24X7 ம் அழைத்துக்கொண்டே இருந்தால், அவை அலர்ஜி பேசிகளாகிவிடும் என்பதை மறக்காதீர்கள்!

## ஆள் பாதி ஆடை பாதி!

"நமது பெர்சனாலிட்டியைப் பிரதிபலிப்பதில் பெரும்பங்கு வகிப்பது, நாம் அணியும் ஆடைகள். நல்ல தரமான ஆடைகளையே தேர்ந்தெடுக்க வேண்டும். பளீர் நிறங்களைத் தவிர்த்து, மென்மையான நிறங்களையே உடுத்துங்கள். நடக்கும்போதும் நீங்கள் அணிந்திருக்கும் உடை உங்களுக்குச் சௌகரியமாக இருக்கிறதா என்று கவனியுங்கள். நிறைய நகைகள் அணிந்துகொள்ள வேண்டாம். உங்கள் முக அமைப்புக்கு ஏற்ற, ஹேர்ஸ்டைலைத் தேர்ந்தெடுங்கள். பொதுவாக, இன்றைய மாடர்ன் பெண்கள் புரொஃபஷனல் காரணங்களுக்காக நீளமான கூந்தலை விரும்புவது இல்லை. ஆனால், ஒழுங்காகப் பராமரிக்கப்படும் நீளமான கூந்தலும் அழகாக உங்கள் கடமையுணர்ச்சியைப் பிரதிபலிப்பதாகவே இருக்கும். இவற்றையெல்லாம்விட முக்கிய விஷயம், பெர்ஃப்யூம் பற்றியது. அழுத்தமான நெடியடிக்கும் வாசனைத் திரவியங்களைத் தொடவே வேண்டாம். நேர்முகத் தேர்வின்போது, மோசமான பெர்ஃப்யூமால் வேலை வாய்ப்பு பறிபோனவர்கள் எல்லாம் உண்டு. சென்ட், பெர்ஃப்யூம் போன்றவற்றைவிட டியோடரன்ட் நல்ல பலனைத் தரும்!" என்று ஃபேஷன் டிப்ஸ் தருகிறார் ஃபேஷன் டிசைனர் தபு.

- ஒல்லி ப்ளஸ் உயரமான உடல்வாகுகொண்டவர்கள் நீளவாக்கில் கோடுகள் போட்ட உடைகளைத் தவிர்த்து, அகலவாக்கில் கோடுகள் உள்ள உடைகளை உடுத்தலாம். ஃபுல் ஸ்லீவ் உடைகள், கான்ட்ராஸ்ட் நிறங்கள் இவர்களுக்கு அழகாகப் பொருந்தும். ஸ்லீவ்லெஸ் உடைகளைத் தவிர்ப்பது நலம். காட்டன் உடைகள் இவர்களுக்குக் கம்பீரமான தோற்றத்தைக் கொடுக்கும்.
- கொஞ்சம் குள்ளமாக, ஒல்லியான உடல்வாகு கொண்டவர்கள் ஒரே நிறத்திலான ஆடைகளைத் தேர்ந்தெடுக்கலாம். இவர்களுக்குப் பெரும்பாலும், கழுத்துப் பகுதி அழகாக இருக்கும் என்பதால், அதை எடுப்பாகக் காட்டும் காலர் நெக் வகை உடைகளை அணியலாம்.
- உயரமான, சற்றே குண்டான உடல்வாகுகொண்ட பெண்கள், அடர்த்தியான நிறங்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஒரே விதமான பேட்டர்ன் உள்ள உடைகளைத் தேர்ந்தெடுத்து அணிவது, உடலைக் கொஞ்சம் ஸ்லிம்மாகக் காட்டும். டைட் ஃபிட்டிங் உடைகள், காலர், ஃப்ரில் போன்றவற்றைத் தவிர்த்துவிடுவது நல்லது.
- குள்ளமான, குண்டான உடல்வாகு உடையவர்கள் பெரிய டிசைன்கள், ஸ்லீவ்லெஸ், ஃபுல்ஸ்லீவ் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். ஒரே நிறத்திலான உடைகள், நீளவாக்கில் கோடு போட்ட டிசைன்கள் இவர்களுக்கு நன்றாக இருக்கும்.
- மாடர்ன் தோற்றம் தரும் என்றாலும், அலுவலகம், கல்லூரி போன்றவற்றுக்கு இறுக்கமான உடைகள் அணிந்து செல்வது, மரியாதைக்குரியவர் என்ற இமேஜை உங்களுக்குத் தராமல் போகலாம். அதனால், இந்த விஷயத்தில் கவனம் தேவை.



வேண்டும். உங்கள் காதலன் அல்லது கணவனுக்குப் பிடிக்குமே என்று 'கலாபக் காதலா!' என்று ஒலிக்கவிட்டிருப்பீர்கள். ஆனால், உங்களை அழைக்கும் அத்தனை ஆண்களும், நீங்கள் அழைப்பை ஏற்கும் வரை தான்தான் உங்கள் கலாபக் காதலன் என்ற கற்பனையில் திளைத்துக்கொண்டு இருக்கலாம். உஷார்!

- நீங்கள் ஒருவரைத் தொடர்புகொள்ளும்போது, உங்கள் அழைப்பு 'கால் வெயிட்டிங்'கில் இருந்தால், உடனே இணைப்பைத் துண்டியுங்கள். எதிர் முனையில் அவர் ஏதேனும் முக்கியமான தகவல்களைக் கேட்டுக்கொண்டு இருந்தால், உங்கள் அழைப்பு ஏற்படுத்தும் 'பீப் பீப்' ஒலி நிச்சயம் உங்கள் மீது ஒரு வெறுப்பை உண்டாக்கும்!
- கால் வெயிட்டிங் வந்தாலோ அல்லது உங்கள் அழைப்பு அட்டெண்ட் செய்யப்படவில்லை என்றாலோ, உடனே மீண்டும் மீண்டும் அழைத்துக்கொண்டே இருக்காதீர்கள். 'நான் இன்னார். இன்ன விஷயம் தொடர்பாகப் பேச விரும்புகிறேன்!' என்ற ஒரு வரி மெசேஜ் அனுப்பிக் காத்திருங்கள்.
- பொது இடங்களில் ஸ்பீக்கர் போனில் பேசுவது, லவுட்ஸ்பீக்கரில் பாட்டு கேட்பது போன்றவை இங்கிதமான பழக்கமல்ல.
- மருத்துவமனை, கோயில்கள், துக்க நிகழ்வுகள் போன்ற இடங்களில் தவறாமல் மொபைலை சைலன்ட் மோடுக்கு மாற்றுங்கள். அவசியமான அழைப்பென்றாலும், மெதுவாகப் பேசி, பிறகு அழைப்பதாகக் கூறுங்கள்.
- எதிர்முனையில் பேசுபவர் எந்தச் சூழ்நிலையில் இருக்கிறார் என்பதைத் தெரிந்துகொண்டு பேச ஆரம்பியுங்கள்.
- அச்சுப்பிச்சு அலறல் ரிங்டோன்களை வைத்து, சுற்றியிருப்பவர்களைத் திகிலூட்டாதீர்கள்.
- அலுவலகத்துக்கு என ஒலி குறைந்த புரொஃபைல்களை ஃபிக்ஸ் செய்துகொள்வதன் மூலம், உங்களுக்கு வரும் அழைப்புகள் மற்றவர் கவனத்தைக் கலைக்காதவாறு

இளமையின் விசை →



பார்த்துக்கொள்ளுங்கள்.

- 24X7 தொடர்புக்குத்தான் அலைபேசிகள். ஆனால், 24X7 ம் அழைத்துக்கொண்டே இருந்தால், அவை அலர்ஜி பேசிகளாகிவிடும் என்பதை மறக்காதீர்கள்!

ஆள் பாதி ஆடை பாதி!

"நமது பெர்சனாலிட்டியைப் பிரதிபலிப்பதில் பெரும்பங்கு வகிப்பது, நாம் அணியும் ஆடைகள். நல்ல தரமான ஆடைகளையே தேர்ந்தெடுக்க வேண்டும். பளீர் நிறங்களைத் தவிர்த்து, மென்மையான நிறங்களையே உடுத்துங்கள். நடக்கும்போதும் நீங்கள் அணிந்திருக்கும் உடை உங்களுக்குச் சௌகரியமாக இருக்கிறதா என்று கவனியுங்கள். நிறைய நகைகள் அணிந்துகொள்ள வேண்டாம். உங்கள் முக அமைப்புக்கு ஏற்ற, ஹேர்ஸ்டைலைத் தேர்ந்தெடுங்கள். பொதுவாக, இன்றைய மாடர்ன் பெண்கள் புரொஃபஷனல் காரணங்களுக்காக நீளமான கூந்தலை விரும்புவது இல்லை. ஆனால், ஒழுங்காகப் பராமரிக்கப்படும் நீளமான கூந்தலும் அழகாக உங்கள் கடமையுணர்ச்சியைப் பிரதிபலிப்பதாகவே இருக்கும். இவற்றையெல்லாம்விட முக்கிய விஷயம், பெர்ஃப்யூம் பற்றியது. அழுத்தமான நெடியடிக்கும் வாசனைத் திரவியங்களைத் தொடவே வேண்டாம். நேர்முகத் தேர்வின்போது, மோசமான பெர்ஃப்யூமால் வேலை வாய்ப்பு பறிபோனவர்கள் எல்லாம் உண்டு. சென்ட், பெர்ஃப்யூம் போன்றவற்றைவிட டியோடரன்ட் நல்ல பலனைத் தரும்!" என்று ஃபேஷன் டிப்ஸ் தருகிறார் ஃபேஷன் டிசைனர் தபு.

- ஒல்லி ப்ளஸ் உயரமான உடல்வாகுகொண்டவர்கள் நீளவாக்கில் கோடுகள் போட்ட உடைகளைத் தவிர்த்து, அகலவாக்கில் கோடுகள் உள்ள உடைகளை உடுத்தலாம். ஃபுல் ஸ்லீவ் உடைகள், கான்ட்ராஸ்ட் நிறங்கள் இவர்களுக்கு அழகாகப் பொருந்தும். ஸ்லீவ்லெஸ் உடைகளைத் தவிர்ப்பது நலம். காட்டன் உடைகள் இவர்களுக்குக் கம்பீரமான தோற்றத்தைக் கொடுக்கும்.
- கொஞ்சம் குள்ளமாக, ஒல்லியான உடல்வாகு கொண்டவர்கள் ஒரே நிறத்திலான ஆடைகளைத் தேர்ந்தெடுக்கலாம். இவர்களுக்குப் பெரும்பாலும், கழுத்துப் பகுதி அழகாக இருக்கும் என்பதால், அதை எடுப்பாகக் காட்டும் காலர் நெக் வகை உடைகளை அணியலாம்.
- உயரமான, சற்றே குண்டான உடல்வாகுகொண்ட பெண்கள், அடர்த்தியான நிறங்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஒரே விதமான பேட்டர்ன் உள்ள உடைகளைத் தேர்ந்தெடுத்து அணிவது, உடலைக் கொஞ்சம் ஸ்லிம்மாகக் காட்டும். டைட் ஃபிட்டிங் உடைகள், காலர், ஃப்ரில் போன்றவற்றைத் தவிர்த்துவிடுவது நல்லது.
- குள்ளமான, குண்டான உடல்வாகு உடையவர்கள் பெரிய டிசைன்கள், ஸ்லீவ்லெஸ், ஃபுல்ஸ்லீவ் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். ஒரே நிறத்திலான உடைகள், நீளவாக்கில் கோடு போட்ட டிசைன்கள் இவர்களுக்கு நன்றாக இருக்கும்.
- மாடர்ன் தோற்றம் தரும் என்றாலும், அலுவலகம், கல்லூரி போன்றவற்றுக்கு இறுக்கமான உடைகள் அணிந்து செல்வது, மரியாதைக்குரியவர் என்ற இமேஜை உங்களுக்குத் தராமல் போகலாம். அதனால், இந்த விஷயத்தில் கவனம் தேவை.

7.4.10 ஆனந்த விகடன் 57